**இணைப்பு-1**

**அணி எண்: 65**

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி பெற உள்ள பயிற்சியாளர்களுக்கான முக்கிய குறிப்புரைகள் **(பயிற்சியாளர்களை விடுவிக்கும் தாங்களும், தங்கள் சார்நிலை அலுவலகங்களுக்கும் பயிற்சியாளர்களிடம் இந்த இணைப்பை கண்டிப்பாக வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.)**

**பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு வருவதற்கான பேருந்து வழித்தடங்கள்**

<table>
<tr><th>வ.எண்</th><th>புறப்படும் இடம்</th><th>வழி</th><th>சத்தியமங்கலம் - பவானிசாகர் பேருந்து நேரம்</th><th>சேரும் இடம்</th></tr>
<tr><td>1</td><td>சென்னை<br>↓<br>சேலம்<br>↓<br>ஈரோடு<br>↓<br>சத்தியமங்கலம்</td><td rowspan="3">சத்தியமங்கலம்<br>↓<br>பவானிசாகர் பேருந்து நேரம்</td><td rowspan="3">04.45 முப<br>05.25 முப<br>05.30 முப<br>07.25 முப<br>09.55 முப<br>10.40 முப<br>11.40 முப<br>11.50 முப<br>12.10 பிப<br>01.50 முப<br>02.30 பிப<br>04.20 பிப<br>05.00 பிப<br>06.35 பிப<br>07.00 பிப<br>08.35 பிப<br>09.20 பிப</td><td rowspan="3">பவானிசாகர் பேருந்து நிலையம்</td></tr>
<tr><td>2.</td><td>வேலூர்<br>↓<br>சேலம்<br>↓<br>ஈரோடு<br>↓<br>சத்தியமங்கலம்</td></tr>
<tr><td>3.</td><td>திருச்சி<br>↓<br>ஈரோடு<br>↓<br>சத்தியமங்கலம்</td></tr>
<tr><td rowspan="2">4.</td><td rowspan="2">நாகர்கோவில்<br>↓<br>திருநெல்வேலி<br>↓<br>மதுரை<br>↓<br>திருப்பூர்<br>↓</td><td rowspan="2">புளியம்பட்டி<br>↓<br>பவானிசாகர் பேருந்து நேரம்</td><td>புளியம்பட்டி - பவானிசாகர் பேருந்து நேரம்</td><td rowspan="2">பவானிசாகர் பேருந்து நிலையம்</td></tr>
<tr><td>06.40 முப<br>07.10 முப<br>07.20 முப<br>07.50 முப<br>08.50 முப</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | புளியம்பட்டி | புளியம்பட்டி<br>↓<br>பவானிசாகர் பேருந்து நேரம் | 09.00 முப<br>09.20 முப<br>09.55 முப<br>10.40 முப<br>11.45 முப<br>12.30 பிப<br>01.20 பிப<br>01.50 பிப<br>02.40 பிப<br>03.00 பிப<br>04.10 பிப<br>04.40 பிப<br>05.10 பிப<br>05.15 பிப<br>06.15 பிப<br>06.45 பிப<br>07.30 பிப<br>07.40 பிப<br>08.20 பிப<br>09.20 பிப | |
| 5. | மதுரை<br>↓<br>திருப்பூர்<br>↓<br>புளியம்பட்டி | | | |
| 6. | கோவை<br>↓<br>அன்னூர்<br>↓<br>புளியம்பட்டி | | | |
| 7. | ஊட்டி<br>↓<br>மேட்டுப்<br>பாளையம்<br>↓<br>பவானிசாகர் | மேட்டுப்பாளையம்<br>↓<br>பவானிசாகர் பேருந்து நேரம் | 05.20 முப<br>06.10 முப<br>06.30 முப<br>07.20 முப<br>07.45 முப<br>08.40 முப<br>09.15 முப<br>10.05 முப<br>10.21 முப<br>10.40 முப<br>10.45 முப<br>11.00 முப<br>11.15 முப<br>11.35 முப<br>12.35 பிப<br>01.00 பிப<br>01.15 பிப<br>01.45 பிப | பவானிசாகர்<br>பேருந்து<br>நிலையம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 02.45 பிப<br>03.15 பிப<br>06.45 பிப<br>03.55 பிப<br>04.35 பிப<br>05.50 பிப<br>06.15 பிப<br>07.15 பிப<br>07.25 பிப | |

**1. முக்கியமான ஆவணங்கள் உள்ள இணையதள இணைப்புகள் விவரம்**

| வ.எண் | ஆவணங்கள் விவரம் | இணையதள இணைப்பு விவரம் |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப் பத்திரம் மாதிரி படிவம் | http://cstibhavanisagar.org/trdoc/link.pdf |
| 2. | ஆளறி அடையாள அட்டையுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணை | |
| 3. | தொடர்புடைய அரசாணைகள் | |
| 4. | பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடம் | http://goo.gl/maps/BkQka6r2jxL2 |

பயிற்சியாளர்கள் மேற்படி இணையதள இணைப்பின் மூலம், ஒப்பந்தப்பத்திரத்தின் மாதிரி படிவம், ஆளறி அடையாள அட்டையுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணை மற்றும் பயிற்சி பெற தகுதி வாய்ந்தவர்கள், பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களிப்பு பெற தகுதி வாய்ந்தவர்கள் தொடர்பான அரசாணைகள் ஆகியவற்றை உடனடியாக பதிவிறக்கம் செய்து தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**2. பயிற்சி சேர்க்கையின் போது பயிற்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களின் பட்டியல்:**

**அ. ஒப்பந்தப் பத்திரம்**

- அரசு கடித எண். 64943/ஏ/75-17, பொது (பயிற்சிதுறை), நாள். 27.07.1976 மற்றும் அரசுக் கடித எண். 74649/பயிற்சி-1/88-2, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி-1) துறை நாள். 26.10.1988 ஆகியவற்றில் அறிவுறுத்தப்பட்டவாறு, உரிய படிவத்தில் பயிற்சியாளர்கள் தங்களது இரண்டு மாத சம்பளம் அல்லது குறைந்தது ரூ.70,000/-க்கு குறைவில்லாமல் ஒரு ஒப்பந்தப் பத்திரத்தை தயாரிக்க வேண்டும். இரண்டு பிரதிகள் தயார் செய்து சாட்சிகள் பிணையதாரர் மற்றும் அலுவலகத் தலைவர் ஆகியோரால் முறையாக கையொப்பம் இடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஒரு பிரதியை பயிற்சி சேர்க்கை அன்று தவறாது நேரில் சமர்ப்பிக்க வேண்டும். மற்றொரு பிரதியை அலுவலகத் தலைவர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

**ஆ. ஆளறி அடையாளச் சான்றுடன் கூடிய பணிவிடுவிப்பு ஆணை:**

- முறையான படிவத்தில் ஆளறி அடையாள சான்றுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணையினை பயிற்சியாளர் பயிற்சி சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.
- பயிற்சியாளரை அடையாளம் காணும் விதத்தில் பயிற்சியாளரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் பணிவிடுவிப்பு ஆணையில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, முறையே அலுவலகத் தலைவரால் மேலொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

**3. பயிற்சிக்கால முழுமைக்கும் பயிற்சிக் கட்டண விவரம்:**

03.12.2024 **அன்று காலை 09.00 மணிக்குள் பயிற்சி நிலையத்தில் ஆஜராக வேண்டும் கீழ்க்கண்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயிற்சியாளர்கள் தொடர்பான பயிற்சிக் கட்டணத் தொகையை இணைய வழியாக (Online Payment) மட்டுமே செலுத்த வேண்டும். ரொக்கமாக பெறப்பட மாட்டாது. அதே சமயம், குழந்தையுடன் தங்கும் உடனாளிகள் தொடர்பான கட்டணத்தை பயிற்சியில் சேரும் நாளன்று ( QR Scan UPI Payment மூலம்) பயிற்சி நிலையத்தில் செலுத்த வேண்டும்.**

| வ. எண் | கட்டண விவரம் | பயிற்சியாளர்கள் மட்டும் செலுத்த வேண்டிய மொத்த தொகை (ரூ.) (Online Payment) | குழந்தையுடன் தங்கும் உடனாளுக்கு மட்டும் (Attender Only) சேர்க்கை நாளில் அலுவலகத்தில் செலுத்த வேண்டிய மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | உணவக முன்பணம் (இத்தொகை தற்காலிகமானது விலை ஏற்றத்தைப் பொறுத்து கூடுதல் தொகை செலுத்த நேரிடலாம்) | 6,000 | 6,000 |
| 2 | அறைவாடகை (54 நாட்கள் X ரூ.60) | 3,240 | (54 நாட்கள் X ரூ.120) 6,480 |
| 3 | பஞ்சாயத்து நிதி | 120 | - |
| 4 | பராமரிப்பு நிதி (54 நாட்கள் X ரூ.5) | 270 | - |
| 5 | காப்புத் தொகை (திரும்ப வழங்கக் கூடியது) | 100 | - |
| 6 | பயிற்சிக் கையேடு | 570 | - |
| 7 | சுத்தம், சுகாதாரக் கட்டணம் | - | 1500 |
| | மொத்த கட்டணம் | 10,300/- | 13,980/- |

1. இப்பயிற்சி நிலைய இணைய தளத்தில் (www.cstibhavanisagar.in-> Online Admission) இணைய வழியாக **(18.11.2024 அன்று காலை 09.00 மணி முதல் 25.11.2024 மாலை 05.00 மணி வரை)** பயிற்சியாளர்கள் தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து, மேற்கண்டுள்ள பயிற்சிக் கட்டணத்தை இணைய வழியாக செலுத்த வேண்டும். தொகை செலுத்திய **UTR எண்ணை** முகப்பு விண்ணப்பத்தில் மறவாமல் குறிப்பிட வேண்டும்.

2. மேலும், தொடர்புடைய ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வது மற்றும் கையொப்பம் பெறுவது தொடர்பாக கொடுக்கப்படும் விரிவான வழிமுறைகளை (பதிவேற்றம் தொடர்பான வழிமுறைகளுக்கு இணையதளத்தைப் பார்க்கவும்) பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>இணைய வழியில் (Online) விண்ணப்பித்தல் தொடர்பாக பயிற்சியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்</u>**

1. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் தங்களுடைய அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மட்டும் உபயோகிக்க வேண்டும். **<u>உடன் பணிபுரியும் பணியாளர் / தந்தை / கணவர் / மனைவி ஆகியோரது மின்னஞ்சல் மற்றும் அலைபேசியை பயன்படுத்தக் கூடாது.</u>**
2. கணினி நிறுவனங்களில் சென்று பதிவு செய்யும் நேர்வில் கணினி நிறுவன உரிமையாளரின் மின்னஞ்சலையோ அல்லது அவரது அலைபேசி எண்ணையோ உபயோகிக்கக் கூடாது.
3. பயிற்சியாளர்களின் பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல், பயிற்சியாளர்களால் பதிவு செய்யப்பட்ட **<u>மின்னஞ்சல்</u>** <u>மற்றும்</u> **<u>அலைபேசி எண்</u>** என்பதால் அதை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். **<u>இதன் மூலமாகவே பயிற்சியாளர்கள் தங்களுடைய பயிற்சி சான்று மற்றும் மதிப்பெண் சான்று ஆகியவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.</u>**
4. பயிற்சிக் கட்டணம் செலுத்தும் போது வங்கியில் பதிவு செய்த அலைபேசி எண் மற்றும் பயிற்சி விண்ணப்பம் பதிவு செய்யும் அலைபேசி எண் ஆகிய இரண்டும் கண்டிப்பாக ஒரே எண்ணாக இருத்தல் வேண்டும்.
5. புகைப்படத்தை பதிவேற்றம் செய்யும் போது (2x2 inches) (51x51 mm) (50 mb-க்கு மிகாமல்) என்ற அளவில் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்தல் வேண்டும். A4 தாளில் புகைப்படத்தை வைத்து ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்தல் கூடாது.
6. ஆதார் எண்ணை பதிவேற்றும் போது இருபக்கங்களும், ஒரே பக்கத்தில் இருக்குமாறு தெளிவாக ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.
7. மாற்றுத்திறனாளிகள் (Differntly Abled Persons) மற்றும் மருத்துவப் பரிசோதனையில் இருக்கும் பயிற்சியாளர்கள் விண்ணப்பதில் பதிவு செய்யும் போது அதை கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அதை பொறுத்து அவர்களுக்கு வகுப்பு மற்றும் அறை ஒதுக்கீடு செய்யப்படும்.
8. விண்ணப்பம் பதிவு செய்த அலைபேசி எண் மற்றும் பயிற்சிக் கட்டணம் செலுத்திய அலைபேசி எண் மாறுபட்டு இருப்பின் பயிற்சியாளர்களின் வருகைச் சான்று மற்றும் மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் செய்ய இயலாது. மேலும் இரண்டு தவணைகளில் பயிற்சிக் கட்டணம் செலுத்திய பயிற்சியாளர்களுக்கு எக்காரணம் கொண்டும் பயிற்சிக் கட்டணத்தை திருப்பி வழங்கப்படமாட்டாது.
9. இணையவழி பதிவேற்றம் செய்த ஒப்பந்தப்பத்திரம் A4 வெள்ளைத் தாளில் பதிவிறக்கம் செய்து **Print out** எடுத்து அலுவலகத் தலைவரின் ஒப்பம் பெற்றுவர வேண்டும்.
10. இணையவழி பதிவேற்றம் செய்த விண்ணப்பம் மற்றும் அனைத்து ஆவணங்களையும் பதிவிறக்கம் செய்து **Print out** எடுத்து அலுவலகத் தலைவரின் ஒப்பம் பெற்றுவர வேண்டும்.

**4. அனைத்துப் பயிற்சியாளர்கள் கட்டாயம் கொண்டு வர வேண்டிய பொருட்கள் விவரம்**

| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | **நீலநிற Tசர்ட், நீலநிற பேண்ட் (ஆண்கள்)**<br>(விளையாட்டு / சிரமதானம்) | **2 செட்** |
| 2. | **மெரூன் நிற Tசர்ட், மெரூன் நிற பேண்ட் (பெண்கள்)**<br>(விளையாட்டு / சிரமதானம்) | **2 செட்** |
| 3. | வெள்ளை நிற கான்வாஷ் ஷூ (1 செட்)<br>மற்றும் கருநீல நிற சாக்ஸ் (2 செட்) | **1 செட்** |
| 4. | **விளையாட்டுப் பயிற்சிக்கு தனியே**<br>**(Indoor Non Marked Shoe)-1 செட்**<br>**மற்றும் சாக்ஸ் – 2செட்**<br>**(அனைவரும் கட்டாயமாக கொண்டு வரவும்)** | **1 செட்** |
| 5. | பக்கெட் பெரியது மற்றும் மக் சிறியது | **1 எண்** |
| 6. | போர்வை , கம்பளி | **1 எண் (Each)** |
| 7. | எவர்சில்வர் கப், தட்டு, டம்ளர் மற்றும் ஸ்பூன் | **1 எண் (Each)** |
| 8. | டார்ச் விளக்கு மற்றும் குடை | **1 எண்** |
| 9. | நோட் மற்றும் பால்பாயிண்ட் பேனா | **10 எண்கள்** |
| 10. | கால்குலேட்டர் | **1 எண்** |
| 11. | யோகா மேட் | **1 எண்** |
| 12. | ரப்பர் கையுறை | **2 செட்** |
| 13. | **6 அடுக்கு டிபன் கேரியர்**<br>( **குழந்தையுடன் வரும் பயிற்சியாளர்கள் மட்டும்**) | **1 எண்** |
| 14. | பகிர்மானப் பதிவேடு / தன்பதிவேடு / காலமுறைப்பதிவேடு/ நினைவூட்டு நாட்குறிப்பேடு – தலா – 20 பக்கங்கள் வீதம் | **1 செட் (அசல் அல்லது ஜெராக்ஸ் நகல்)** |

**பயிற்சியாளர்களுக்கான பொதுவான அறிவுரைகள்**

1. பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் 03.12.2024 **அன்று முற்பகல் 09.00 மணிக்குள்** ஆஜராக வேண்டும். சேர்க்கை நடைபெறும் இடத்தில் அமைதியை கடைபிடிக்க வேண்டும். ஏற்கனவே போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில் காலதாமதமாக வரும் பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். அவர்களுக்கு பதிலாக மாற்றுப் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். ஆகவே பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் உரிய நேரத்தில் பயிற்சிக்கு கலந்து கொள்வதற்கு ஏதுவாக சேர்க்கை நாளுக்கு முதல் நாள் பணி விடுவிப்பு ஆணையினை அலுவலகத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். பயிற்சியாளர்கள் பயிற்சி நடைபெறும் இடத்தை http://goo.gl/maps/BkQka6r2jxL2 என்ற இணையதளத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

2. பயிற்சிக்கு விடுவிக்கப்படும் பயிற்சியாளர்கள் போதுமான பயணமுன்பணம் பெற தாமதம் செய்யாமல் விண்ணப்பம் செய்ய வேண்டும். மேலும் பயிற்சிக்கு உரிய கட்டணத்தை கண்டிப்பாக Online Method-ல் செலுத்தி இருக்க வேண்டும். சேர்க்கை நாளன்று பயிற்சி நிலையத்தில் தொகையை பணமாக செலுத்தலாமா என பலர் வினா எழுப்புகின்றனர். **கண்டிப்பாக இணைய வழியில் (Online Method) மட்டுமே கட்டணம் செலுத்த வேண்டும். இணைய வழியில் பணம் செலுத்தாமல் வரும் பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். ஆனால் குழந்தைகளுடன் தங்கும் பயிற்சியாளர்களின் உடனாளிகள் தொடர்பான கட்டணத்தை நேரில் ( QR Scan UPI Payment) ஆக சேர்க்கை நாளன்று செலுத்த வேண்டும்.**

3. இந்த பயிற்சிக் காலத்தில் குடும்பத்தில் பிறப்பு, இறப்பு போன்ற நிகழும் எதிர்பாராத நிகழ்வுகளுக்கு இரண்டு நாட்கள் மட்டும் தற்செயல் விடுப்பு வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் விசாரணை / சாட்சி போன்ற வேறு காரணங்களுக்காகவோ மற்றும் பிற அலுவலகப் பணிகளுக்காகவோ பயிற்சியாளர்களை விடுவிக்க இயலாது. **இரண்டு நாட்களுக்கு மேல் தற்செயல் விடுப்பு எடுத்தாலோ அல்லது பயிற்சிக்கு வராமல் இருந்தாலோ, அத்தகைய பயிற்சியாளர்கள் பயிற்சியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.**

4. இந்த பயிற்சிக்கு அனுப்பப்படும் பயிற்சியாளர்கள் முக்கியமாக பெண்கள் பாதுகாப்பு கருதி விலை உயர்ந்த நகைகள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு வருதல் கூடாது.

5. மாற்றுத் திறனாளிகளில் 100 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள மாற்றுத் திறனாளிகள் அதற்குரிய ஆதாரங்களைக் கொண்டு வருதல் வேண்டும்.

6. பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலம் முழுவதும் (மாற்றுத் திறனாளிகளின் வாகனங்களைத் தவிர) இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை எடுத்து வர அனுமதி இல்லை.

7. **ஐந்து மாதம் மற்றும் அதற்கு மேல் உள்ள கர்ப்பிணி பெண் பயிற்சியாளர்களை பயிற்சிக்கு அனுமதிக்க இயலாது.**

ஒ. ஏ 13/11/24

மாவஅ / முதல்வர்

13/11/24